(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR

O.S.NO. 444/2022 PW 1

Name மூர்த்தி

Father's Name

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

15.09.2023.

குறுக்கு விசாரணை

தாவா சொத்து காப்பெரும்பாக்கத்தில் உள்ளது. சர்வே எண் 493/3ல் உள்ளது. ஒரு பக்கம் 7 மீட்டரும், மற்றொரு பக்கம் 9மீ நீளம் உள்ளது. கிழக்கு பக்கம் 9.7மீ, வடக்கு தெற்க்கு 7 மீ சொச்சம் இருக்கும். வடக்கு மற்றும் மேற்க்கில் செல்வத்தின் நிலம் உள்ளது. கிழக்கு திசையில் சென்னையில் வசிப்பவருக்கு சொந்தமான நிலம் உள்ளது. தெற்க்கு திசையில் தசரதன் என்பவரின் நிலம் உள்ளது. தசரதன் அதே கிராமத்தில் உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து தற்போது கரம்பு நிலமாக உள்ளது. இரண்டு வருடத்திற்கு முன்பு பிரதிவாதி செல்வம் தைலம் மரங்கள் வைத்திருந்தார். தாவா சொத்தில் வடக்கு பக்கம் சுமார் 50 மரங்கள் வைத்துள்ளார். பழைய உரிமையாளர் வைத்த தேக்கு மரங்களும் அங்கு உள்ளது. 30 வருடத்திற்கு முன்பு இருந்தவர்கள் வைத்திருப்பார்கள். ஆதிகேசவன், பெருமாள் அல்லது விஜயலட்சுமி அந்த மரங்களை வைத்திருப்பார்கள். (சாட்சி இந்த விவரத்தை தாமாக கூறினார்) என் தர்பபில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரைய ஆவணத்தில் இந்த மரங்கள்பற்றி விவரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அந்த மரங்களின் மதிப்பு தாவா தாக்கல் செய்துள்ள சமயத்தில் என்ன மதிப்பு என்று எனக்கு தெரியாது. எனது தாவாவில் மரங்களின் மதிப்பை நான் சொல்லவில்லை. ஆதியில் யாருக்கு தாவா சொத்து சொந்தமானது என்று எனக்கு நேரிடையாக தெரியாது. ஆதிகேசவன் யாரிடமிருந்து எப்போது வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனக்கு 51 வயது. தாவா சொத்து புன்செய் நிலமாகும். வழக்கறிஞர் ஆணையர் வந்து

தாவா சொத்தை பார்வையிட்டபோது நான் இருந்தேன். செல்வத்திற்கு சொந்தமாக இரண்டு பக்கத்திலும் நிலங்கள் உள்ளன. தாவா சொத்து அமைந்துள்ள இடத்திற்கு சுற்று புரத்தில் எனக்கு சொந்தமான இடம் கிடையாது என்றால் சரிதான். ஆதிகேசவன் உயிருடன் இல்லை. அவர் எந்த ஊரில் வசித்துவந்தார் என்று எனக்கு தெரியாது.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)